சிவமயம்



அமரர்

# திருமதி. சந்திரா வேலும்மயிலும்

அவர்களின் சிவப்பேறு குறித்த

# 31 ம் நாள் நினைவு மலர்


09.10.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தென்னவன்மரபடியை பிறப்பிடமாகவும்,
முல்லைத்தீவு, கள்ளப்பாடு எனும் ஊரை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி. சந்திரா வேலும்மயிலும்

அவர்களின் விண்ணக பிறப்பின்

# நினைவு மலர்

**09.10.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத் தலைவியின்
பாத கமலங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

மனிதருள் தனி மனிதராய்
தர்மம் காத்து நலமுற
என்னைப் பேணி வளர்த்து
பண்புடனும் பாசத்துடனும்
மன மகிழ்வுடன்
வாழ்வாங்கு வாழ்ந்து – இன்று

வானுறையும் பேறு பெற்ற
எனது அன்புத் தெய்வத்தின்
பாதக்கமலத்திற்கு
இம்மலரினை
காணிக்கையாக்குகின்றோம்

எங்கள் தாயே ஏற்றருள்வீர்!
– குடும்பத்தினர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



அன்னை மடியில்
01.09.1967

இறைவனடியில்
09.09.2021

## அமரர் திருமதி. சந்திரா வேலும்மயிலும்

அவர்களின்

# திதி வெண்பா

நிறைந்த பிலவ ஆவணிவளர்பிறை திருதியையில்
மறைந்த மதிமுகம் சந்திரா – குறைந்த
கால ம்வாழ்ந்து கண்ணீரில் எமையாழ்த்தி
ஆல கண்டனடி சேர்ந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்–உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தனைக்
காதலான் கூப்புவர்தம் கை

# பஞ்சபுராணம்

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
    அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
    மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
    சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
    கணபதி யீச்சரங் காமுறவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே

கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே

மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே

ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ புராணம்



திருச்சிற்றம்பலம்

***தொல்லை யிலும்பிறவி சூழுந்தளை நீக்கி***
***அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை***
***மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்***
***திருவாசகம் என்னுந் தேன்***

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்தாள் வாழ்க
கோகழி ஆண்டகுருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகநின் றண்ணிப்பான் வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்றஅதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயவுரைபனியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாயக் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உ ய்யவென் உ ள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்வமலா
பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப்பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாயெம் பெருமான் வல்வினை யேன்றன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் மொளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமென் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேறெனம் மையா அரனேயோ வென்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப்பணிந்து.

*தொல்லை யிரும்பிறவி சூழுந்தளை நீக்கி*
*அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை*
*மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்*
*திருவாசகம் என்னுந் தேன்*

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி. சந்திரா வேலும்மயிலும்
### அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் சில துளிகள்

வயலும், கடலும் ஒருங்கே அமைந்த அழகிய கிராமம் தென்னமரவடி. இங்கு 1967.09.01 அன்று காலஞ்சென்ற ம.இராசரெத்தினம் சரோஜினிதேவி தம்பதியினருக்கு முதலாவது குழந்தையாக பிறந்தார். இவரின் அழகை நிலவோடு ஒப்பிட்டு அவருக்கு சந்திரா என்ற பெயரை சூட்டினர். அவர்களுடைய உறவுகளுக்கெல்லாம் முதல் பேரப்பிள்ளை, முதலாவது மருமகள், முதலாவது பெறாமகள் என்ற உயரிய அன்பைப் பெறும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. மாமன்மார் ஆறு பேர், சித்தப்பாமார் ஏழுபேர், மாமிமார் இருவர் இவருக்கு. இவருடன் உடன் பிறப்புகளென தங்கை சித்திரா, தம்பிக் கிருபாகரன், சிவஜங்கரன், தயாளன், பாஸ்கரன் என்பவர்கள் இணைந்து மிகவும் அழகிய வாழ்க்கையை அனுபவித்து வந்தார். கொஞ்சம் பிடிவாதம் அதிகம் காரணம் எல்லோருக்கும் செல்லப்பிள்ளையாக தான் இருந்தது. இவர் தனது கல்வியை பெரிதளவில் தொடர முடியாது நாட்டு நிலமை சதி செய்தது. 1984ல் இவர்களது இனக்கலவரத்தால் இடம்பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டம் செல்ல நேர்ந்தது. அங்கு சிலகாலம் சிலாவத்தை என்னும் இடத்தில் குடியமர்ந்த வேளையில் தனது சகோதரியை பாம்பு தீண்டியதால் இழந்தார். சிறிது காலத்தில் தனது தம்பி கிருபாவையும் காலத்தின் கோலத்தினால் இழந்தார். குடும்பத்தோடு துன்புற்றிருந்த போது அவருக்குஅ புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அற்றெண்டன் வேலை கிடைத்தது. அக்காலப் பகுதியில் அவர் தண்ணீரூற்று கணுக்கேணியில் அம்மம்மாவுடன் இருந்த போது அங்குள்ள அயலவர்களுடன் ஒரு உறவினர் போல அன்புடன் பழகி வந்தார்.

வேலை செய்யும் இடத்தில் பெரிய வைத்திய அதிகாரிகள் தொடக்கம் கடைநிலை ஊழியர்கள் வரை மிகவும் மரியாதையுடனும், அன்புடனும், நட்புடனும் பழகி வந்தார். சந்திரா என்றால் எல்லோருக்கும் பிடிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சகல விதமான நோயாளர்களுடனும் அவர்களது உறவுகளுடனும் நெருங்கிப் பழகி அவர்களுக்கு பல உதவிகளையும் சேவைகளையும் செய்துள்ளார். அத்தோடு தனது தந்தை வழி உறவுகளோடும், தாய்வழி உறவுகளோடும் மிகவும் அன்பாகவும் உரிமையுடனம் நடந்து கொள்வார்.

2008ம் ஆண்டு சிவஜங்கரனின் வரன் தேடலில் தி.வேலும் மயிலும் என்பவரை மணம் முடித்தார். அவர்களது இல்லத்திற்கு சான்றாக 2009ல் ஒரு பெண் குழந்தையை பெற்றார். அவருக்கு தரணிகா என பெயர் வைத்து அவளது ஒவ்வொரு அசைவிலும் கவனமும், பெருமையும் கொள்வார்.

இக்காலத்தில் அவளைப் புற்று நோய் பற்றிக் கொண்டது. இரண்டு வருடங்கள் பல வைத்தியங்கள் செய்து விட்டு பின்னர் தன்னால் இனி மருந்து ஏற்ற முடியாது நான் அம்பாளை நம்பித்தான் இருக்கப் போகிறேன். என்று வற்றாப்பளை அம்மனை எப்போதும் துதித்து கடந்த 10 வருடங்களாக சுகமாக வாழ்ந்து வந்தார். தனது வேலையையும் அதோடு ஓய்வு நிலைக்கு கொண்டு வந்தார். தனது குடும்பத்தினருடன் சந்தோசமாக இருந்த வேளை அவரது தம்பிகள் மூவரும் வெளிநாடு சென்று விட்டனர். தந்தையும், தாயும் இவருடன் இருந்தனர். அவரது தந்தை 2019ம் ஆண்டு இறைபதம் அடைந்தார். பின்னர் தொடர்ந்து ஒரு வருடத்தில் அவரது தம்பி பாஸ்கரனை 2020ல் இழந்தார். இவ்விழப்புகளால் தானும் துன்புற்றிருந்தாலும் தாயை மிகவும் கவனமாகப் பராமரித்து வந்தார்.

தனது மகள் தொடர்பாக மிகவும் பெரி கற்பனைகள் அவருக்குண்டு.அவளது பூப்புனித சடங்கை தான் எப்படி செய்வது. அவள் நன்றாகப் படிப்பாள். அவள் ஒரு பெரிய ஆளாக வருவாள் என்றெல்லாம் ஆவலுடன் கதைத்தார். பல கனவுகளுடன் காத்திருந்த வேளை எதையும் காண முடியாமல் அவர் பொல்லாத கொவிட்-19 தொற்றால் ஏற்பட்ட தடைகளுால் தனது வருத்ததிற்க மருந்து பெற முடியாமலும் பயத்தினாலும் 2021.09.09 அன்று மாரடைப்பால் இறைபதமடைந்தார்.

**சத்தியலோஜினி**
**புஸ்பராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஆருயிர் போனது எங்கே...

ஆருயிராய் அல்லும் பகலும் எம்மோடு வாழ்ந்து
ஒருயிராய் நின்று ஒவ்வொரு பொழுதும் கழித்து
பேரருள் கிடைத்த பெருவாழ்வு என எண்ணுகையில்
காரிருள் சூழ்ந்து கண்ணீர் மழை பொழிந்ததேனோ

நல்லதோர் மனைவியாய் நாள்தோறும் பணிசெய்து
சொல்லவோர் வார்த்தையில்லை சுகமான வாழ்வுதனை
உள்ளதோர் இன்பமாய் உறவுகொண்டு வாழ்கையில்
இல்லவோர் வாழ்வு எனக்கூறி நீ இறைபதம் சேர்ந்ததேனோ

அருமையான வாழ்வுதந்து அவனியில் மலர்ந்து
பெருமையான வாழ்வு கண்டு பெருமிதம் கொண்டு
சிறுமையின்றி சென்ற இடம் சிறப்புற்று வாழ்கையில்
வெறுமை வாழ்வு எமக்களித்து விண்ணகம் சென்றதேனோ

பாசமாய்ப் பெற்றெடுத்த பருவக்குழந்தை இருக்கையில்
நேசமாய் நெடுவாழ்வு காணும் நேரமதில்
வாசமாய் வாழ்வு மணம்வீசும் வேளைதனில்
மோசம் போனதேன் என் முழுமதியே

**அன்புக் கணவர்**
**வேலும்மயிலும்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மகளின் இதயத்தில் இருந்து ........

அன்போடு அம்மா என்றழைக்க என்னருகே
ஆசைத்தாயே என் ஆருயிரே நீ இல்லையே
தென்போடு என்வாழ்வில் தெய்வமாய் நின்ற தாயே
தெளிவில்லா வயதில் என்னை விட்டு சென்றதேனோ

என்னை அரவணைத்த என்னருமைத் தாயே
எங்கு செல்வேன் நீ இன்றி இனி நான்
கண்ணை இமைபோல் காத்த கருணை உள்ளமே
காலம் என் கண்ணீர் துடைக்குமா அம்மா

எல்லா தேவைகளும் நீங்கள் எனக்களித்தீர்கள்
இன்புற வைத்து இளமைக்கு வலுவூட்டினீர்கள்
நல்லா இருந்த எம்முறவின் நடுவினிலே
நாதியற்ற வாழ்வு நான்கண்டது ஏனம்மா

தாங்க முடியவில்லை தாயே உன் இழப்பு
தனியொரு மகளாய் நான் நின்று தவிக்கின்றேன்
ஏங்கி ஏங்கி இயலாமல் போகும் என்னிதயம்
இனி எங்கே என் அம்மாவை காணுமோ.

**அன்பு மகள்**
**தரணிகா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிகளின் இரங்கல்பா......

அன்புக்கோர் அக்கா அவனியில் உள்ளாரென்று
ஆசையோடு அன்புகாட்டி பழகிவந்தோம்
பண்புக்கோர் இலக்கனமாய் திகழ்ந்த பாசமலரே
பாதியில் எமைவிட்டு மறைந்து போனதேனோ

கண்ணுக்கோர் இமைபோல் காலமெல்லாம் காத்துநின்று
கருணை காட்டி கருத்தோடு எமையளாக்கி
வின்னுக்கோர் நிலவுபோல் எம்வீட்டில் உதித்தமதியே
விரைந்து நீ விண்ணகம் சென்றதேனோ

தக்க சமயத்தில் உதவிசெய்ய தம்பிமாரிருந்தும்
தரணியில் நீண்ட நாள் தழைத்து நிற்காமல்
பக்கபலமாய் நின்று பாசம் காட்டிய எம்மை மறந்து
பாதிவயதில் பாரினைவிட்டு மறைந்தது ஏனோ

**தம்பிமார்கள்**
**சங்கர், தயா.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமாவின் துயர்பகிர்வு.....

மருமகளாய் வந்துதித்து மனதினில் வாழ்ந்து
மாசற்ற பிறவியாய் குடும்பத்தில்வந்த மணிவிளக்கே
திருமகளாய் வந்து தினம்தோறும் திருஉருவாய் நின்று
திங்கள்போல் திகழ்ந்த தெய்வமேநீ சென்றதெங்கே

கூட்டுக் குடும்பமாய் நின்று குலம்காத்து
குறைவின்றி நல்வாழ்வு கண்டு கோபுரமாய் நின்று
வீட்டுக்கு ஒளிவிளக்காய் இருந்த வெண்ணிலவே
வேதனைதந்து விரைவில் வேறுலகம் சென்றதேனோ

ஓடிய காலமதில் உறவு வளர்த்த மருமகளே
ஒழிவின்றி ஒழுக்கம்பேணி உரிமையோடு வாழ்கையில்
தேடிய வாழ்வுதனை தொடராமல் தேகம்நோய்கண்டிட
தேவனடிசேர விதி உன்னை தேடிவந்ததோ மருமகளே

அன்புமாமா
த. புஸ்பராஜா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்பு மச்சாள்

பாசம் என்னும் பற்றும் கயிற்றால் எமை
கட்டி வைத்தவள் நீ
நேசம் என்ற சொல்லில் எம் நெஞ்சம்
கடந்தவள் நீ
பராமரிக்கப் பலர் இருந்தும், பாசத்தை
பரப்பினாய், நெஞ்சார நிரப்பினாய்...

மச்சாள் எனும் சொல் கடந்து நின்றாய்
என் நெஞ்சில் மற்றொரு தாயாய்...
வார்த்தைக்குள் அடக்க முடியாது நீ கொண்ட
பாசம் எம்மில்...

உன் கள்ளமற்ற சிரிப்பில் அடிமைதான் அனைவரும்
வாடுகின்றோம் உமை இழந்து...
மறுபடி நீ ஒரு ஜென்மம் கொண்டு, வேண்டும்
எங்கள் உறவாக மீண்டும் மண்ணில்...

"இருந்தும் உன் இறப்பை ஏற்க மறுக்கும் மனது"

**பு.ஹம்சானந்தி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மச்சாள்

சிறு வயதிலிருந்தே எனக்கு மிகவும்
நெருக்கமான உறவு நீங்கள்
மட்டும் தான் மச்சாள்....
என்ன கேட்டாலும் முகம் சுழிக்காமல்
வாங்கித் தரும் ஒரு உறவு....
நீங்கள் திருகோணமலை வருகிறீர்கள் என்றால்
அவ்வளவு சந்தோசம் எனக்கு....
அது ஏன் என்று தெரியாது ஆனால்....
நீங்கள் வருவதற்கு முதல் நாளே நான்
வந்து விடுவேன் பெரியப்பா வீட்டிற்கு
உங்களைப் பார்க்க அவ்வளவு பிடிக்கும்
நீங்கள் வந்து நின்ற அவ்வளவு நாட்களும்
நாங்கள் மிகவும் சந்தோசமாய் இருப்போம்
கடைகள், கோயில், கடற்கரை என்று சுற்றுவோம்....
நீங்கள் வந்து நிற்கும் நாட்கள் தான்
எங்கள் சந்தோசமான நாட்கள்....
எப்போதும் ஏதும் கவலையாக கதைத்தால்
உங்கள் கஷரம் போல யோசிக்காதைங்கோ
தாரணி.... எல்லாம் சரி வரும் என்று
ஆறுதல் கூறுவீர்கள்....
கடைசியாகக் கதைக்கும் போது நீங்கள்
சொன்ன வார்த்தை தரணியின் சாமத்திய
வீடு சிறப்பா செய்வோம் என்பதுதான்
அதைக்கூடப் பார்க்க விடாமல் காலன்
உங்களை அவசரமாக எதற்கு
அழைத்தான் மச்சாள்....
எங்களுக்கு என்று இருந்த ஒரு
நல்ல உறவு இனி இல்லை என
நினைக்கும் போது நெஞ்சு கனக்கிறது மச்சாள்....
இனிமேல் எங்கே பார்ப்பேன் உங்களை....

**வினோஜினி**
**கோகுலசங்கர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரிக்க விட்டு நீ
அவசரமாய் எங்கு சென்றாய்
ஆத்தின தேத்தண்ணி
ஆறிப் போகமுன்பு
ஆறிடம் போனாய்
என்மகளே சந்திரா நீ
அழும் உன் பிள்ளையை விட்டு
அம்மா நீ எங்கு சென்றாய்
இட்ட பொட்டு நெத்தி நிறைய
எமன் எடுத்தானோ
நித்திரையில் உன்னை
கட்டியவன் தலைமாட்டில்
கதறுவது கேக்கலையோ
உதிரக் கொடிகளை
ஒவ்வொன்றாய்க் கொடுத்த
பெற்றதாய் தாய்துடிப்பது
பிள்ளை உனக்கு தெரியாதோ
சித்திரா ஐயா புவி
சின்ன மகேந்தியுடன்
சேந்திருக்க போனாயோ
உன்னை பிரிந்து
உறவுகள் துடிக்குதம்மா
உன்தம்பி சங்கர் தயா
தாய்என்று உனைச்சொல்லி
தேம்பி அழுகின்றனர்

சந்திரா உன்பிரிவால்
வந்ததம்மா பெரும்துயர்
சிரித்த முகம் உனக்கு
சில்லறை சிரிப்புனக்கு
ஊர்முழுக்க உறவுனக்கு
ஊரே இன்று பெருந்துயரில்
வழியனுப்ப வழியில்லை
வாழ்வாய் நீ எங்களுடன்



சித்தப்பா
ம.விஜயகுலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனிகளின் இரங்கல்...

அன்பின் வடிவமாய் விளைந்த ஆருயிரே
அண்ணனுக்கு அமைந்த அழகிய அண்ணியே
அல்லும் பகலும் சேவை செய்து அருமைமிகு
சேவகியாய் திகழ்ந்த உங்களை
காலன் விரைந்து காவு கொண்டதேனோ

எங்களுக்கு என்றும் ஆறுதலாய்
எப்பொழுதும் வாழ்ந்து வந்தீங்க
தங்களின் துணையோடு தரணியில் நாமும்
தடையின்றி வாழ்ந்து வரும் வேளையில்
இளவயதில் இறைபதம் அடைந்ததேனோ

வாழும் காலம் மீதமிருக்க வாழ்வில்
காணவேண்டிய காட்சிகள் கண்முன் நிற்க
யாரும் எதிர்பாரா வேளைதனில்
துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
நீங்கள் மீளாத்துயில் கொண்டதேனோ

அண்ணியின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்போமாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனிகளின் துயர் பகிர்வு...

தம்பிக்கு கிடைத்த தகுதியான மனைவியாய்
தரமான வாழ்வு தந்த தங்கநிலவே
தடையின்றி வாழ்வு நகர்ந்து செல்கையில்
தாலிப்பாக்கியம் இழந்து நீங்கள்
தாயக மண்ணைவிட்டு வேறுலகம் சென்றதேனோ

வீட்டுக்கு விருப்பமுடன் சேவைசெய்து
விளையும் பலன்களை அனுபவித்து
நாட்டுக்கும் நல்ல சேவகியாய்
திகழ்ந்து நலம்பேணி வாழ்ந்த
நாயகியே எமைவிட்டு
நீ பிரிந்து சென்றதேனோ

ஓடிவந்து உதவிகள் செய்யும்
உயர்ந்த குணம் கொண்டவராய்
ஓயாமல் உழைத்து வந்தீங்க
இன்று உரியவயது வருமுன்
உலகைவிட்டு சென்றதேனோ

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் இரங்கல்...

மாமி என்று செல்லமாய் அழைக்க
மனதினில் எம்மை வைத்து
மனதார பாராட்டுவீங்க
வீட்டுக்கு வந்து விருப்புடனே
பழகிவந்து மகிழ்ந்திருந்தோம்
மாமியின் அணைப்பில் மகிழ்ந்து
விளையாடிய நாம் இன்று
நீங்கள் இன்றி தவித்து நிற்கின்றோம்
தங்கள் அன்பு மகள் தரணிகா
இன்று தவித்து நிற்க நீங்கள்
சிவனடி சேர்ந்தது ஏன்மாமி
தேடிவந்து எங்கள் தேவைகளை
கேட்டறிந்து தென்பு தந்து
துணை நிற்பீங்க இன்று
தங்களின் துணையின்றி நாம்
தவித்து நிற்கின்றோம்
வேதனையோடு எங்கள் விழிநீர்
அஞ்சலியை செலுத்துகின்றோம்

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

வீர மொழி பேசி நீதி சொன்ன சுவாமி
விவேகானந்தர் எங்கே
சீர் தமிழ் வளர்த்து சிறப்புற வாழ்ந்த - சுவாமி
விபுலானந்தர் எங்கே - நல்
ஊர் தனில் பிறந்து சைவம் காத்த -
ஆறுமுகநாவலர் தான் போன தெங்கே
ஆரும் அறியாமலே சென்ற சந்திரா - அவரும்
சிவன் பாதமடைந்தார் கவலையேனோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்**
**ஞாலத்தில் மாணப் பெரிது"**


பொருள்:தேவைப்படும் காலத்தில் செய்த உதவி, அளவில் சிறிதாக இருந்தாலும், காலச் சிறப்பின் காரணமாக அதன் பெருமை இம்மண்ணுலகத்தை விடப் பெரியதேயாகும்



# நன்றி நவிலல்......

இனிதே வாழ்ந்த காலம் போதுமென்ற
பெருமூச்சுடன் 09.09.2021 இல்
கோணைநாதர் தாள் சேர்ந்த
**அமரர் திருமதி. சந்திரா வேலும்மயிலும்**
அவர்களின் இயற்கை எய்திய செய்தி
கேள்வியுற்று நேரிலும், தொலைபேசி மூலமும்
அனுதாபம் தெரிவித்த உற்றார்கள்,
உறவினர்கள், நண்பர்கள் வேண்டிய
உதவிகளைப் புரிந்த நல்லுள்ளங்கள்
மற்றும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது
அன்பு கலந்த நன்றியினைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்






என்றும் அன்பு நிறை
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org